மறைமலைநகர் நகராட்சி,
நாள்:27.01.2023

**கூட்ட எண்.10 /2023**

**குறள்:** நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப்படும்

**தெளிவுரை:** வாழ்கையின் நிலையாமையை உணர்ந்து நம் உயிர் இருக்கும் போதே உயர்ந்த நற்பணிகளை ஆற்றிட முனைய வேண்டும்.

## அவசரக் கூட்டம்

**2023–ம் ஆண்டு ஜனவரி மாதம் 27.01.2023 தேதி வெள்ளிக் கிழமை மாலை 4.00 மணிக்கு மறைமலை நகர் நகராட்சி மன்றத்தில் அவசரக் கூட்டம் நகர மன்ற தலைவர் திரு.ஜெ.சண்முகம் அவர்கள் தலைமையில் நகராட்சி அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள கூட்ட அரங்கில் நடைபெறும். அதுசமயம் துணைத் தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

தலைவர்
மறைமலைநகர் நகர மன்றம்

**பொருள் எண். 01**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை-28 அவர்களின் கடிதம் ந.க.எண்: 33553/2022/EA2-SWM-4, நாள்:10/01/2023-ன்படி தனியார் மயம் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள 3 ஆண்டு காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரிட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி தேவையான தூய்மை பணியாளர்களை அமர்த்திடவும், இந்நகராட்சியில் நல்ல நிலையில் உள்ள வாகனங்கள் நாள் வாடகை அடிப்படையில் மேற்படி ஒப்பந்ததாரரிடம் வழங்கிடவும் மீதம் தேவையான வாகனங்களை ஒப்பந்ததாரரே அமர்த்தி கொள்ள வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

மறைமலைநகர் நகராட்சியின் தினசரி திடக்கழிவுகள் அகற்றும் பணிக்கு ஒப்பந்ததாரருக்கு டன் ஒன்றிற்கு ரூ.4,285,11/- என்றும் நாளொன்றுக்கான திடக்கழிவுகள்

33.18 டன்கள் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.அதன்படி மேற்படி ஒப்பந்ததாரர்கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | எண்ணிக்கை | பணியாளர்கள் எண்ணிக்கை | வாகனங்கள் எண்ணிக்கை | ஓட்டுநர்கள் எண்ணிக்கை | மேற்பார்வையாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1 | வீடுகள் தோறும் மக்கும் குப்பை எனவும், மக்காத குப்பை எனவும் தரம் பிரித்து BOV வாகனத்தில் வாங்குதல் | 5530 வீடுகள் | 29 பணியாளர்கள் | 14 BOV | | 9 மேற்பார்வையாளர்கள் |
| 2 | வீடுகள் தோறும் மக்கும் குப்பை எனவும், மக்காத குப்பை எனவும் தரம் பிரித்து LCV வாகனத்தில் வாங்குதல் | 22119 வீடுகள் | 88 பணியாளர்கள் | 28 LCV | 28 ஓட்டுநர்கள் | |
| 3 | வணிக நிறுவனங்களில் மக்கும் குப்பை எனவும் மக்காத குப்பை எனவும் தரம் பிரித்து LCV வாகனத்தில் வாங்குதல் | 1088 வணிக நிறுவனங்கள் | 6 பணியாளர்கள் | 3 LCV | 3 ஓட்டுநர்கள் | |
| 4 | வணிக நிறுவனங்களில் மக்கும் குப்பை எனவும் மக்காத குப்பை எனவும் தரம் பிரித்து HCV வாகனத்தில் வாங்குதல் | 726 வணிக நிறுவனங்கள் | 2 பணியாளர்கள் | 1 HCV | 1 ஓட்டுநர் | |
| 5 | பேருந்துகள் செல்லும் தெருக்களை தினந்தோறும் பெருக்குதல், குப்பைகள் அகற்றுதல், செயலாக்கம் செய்தல் | 58.43 கிலோ மீட்டர் | 61 பணியாளர்கள் | 1 HCV | 1 ஓட்டுநர் | |

மேற்படி பணிகளை மேற்கொள்ள பட்டியலில் உள்ள படி பணியாளர்கள் 187, துப்புரவு மேற்பார்வையாளர்கள் 9, ஓட்டுநர்கள் 33 மற்றும் வாகனங்கள், BOV 14, LCV 31 மற்றும் HCV 2 அமர்த்தி திடக்கழிவுகள் செயலாக்கம் செய்திட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நிர்வாக அனுமதியின்படி மன்றத்தின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரிட மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. திடக்கழிவு பணிகள் தொடர்பாக புதிய ஒப்பந்தப்புள்ளிகளை கோருவதற்கு உண்டான நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. திடக்கழிவு பணிகள் மேற்கொள்ள 1ஆண்டிற்கு உண்டான செலவினம் ரூ.616.77(ரூபாய் ஆறு கோடியே பதினாறு லட்சத்து எழுபத்தி ஏழாயிரம் மட்டும்) செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.54/2023/எச்1)

**தலைவர்**
**மறைமலைநகர் நகர மன்றம்**